DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.111/2023**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகேந்திரன் | | : |
| த/பெ | : வரதராஜன் | மதம் | : |
| கிராமம் | : முகப்பேர் | தொழில் | : வியாபாரம் |
| வட்டம் | : சென்னை | வயது | : 72/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 06.02.2026**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி: Pw1</u>**

1. எங்கு வைத்து எதிரிக்கு கடன் கொடுத்தேன். அப்போது யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்றால் எனது அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். அப்பொழுது நானும் எதிரியும் மட்டும் தான் இருந்தோம். அலுவலக முகவரி எண்.85, ஜிஎண்டி ரோடு, பொன்னியம்மன் மேடு, மாதாவரம் சென்னை. நான் வருமானவரி செலுத்தி வருகிறேன். வருமான வரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த பணத்தை காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல் ரூ.5,00,000/- எதிரிக்கு கொடுத்திருந்தால் அதை காண்பித்திருப்பேன் என்றும் அவ்வாறு தராததால் தான் வருமானவரி கணக்கில் காண்பிக்கவில்லை என்றால்சரியல்ல. வியாபாரத்தில் கையிருப்பாக பணம் இருந்து கொண்டே இருக்கும் அதில் எதிரி அவசர தேவை என்பதால் கொடுத்தேன். எதிரி வீட்டிற்கு பலமுறை சென்றுள்ளேன். எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் தெரியுமா என்றால் அவரது மனைவியை மட்டும் பார்த்திருக்கிறேன் வேறு

யாரும் தெரியாது. எதிரியை தவிர அவரது குடும்ப நபர்கள் யாரும் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் பிள்ளைகள் மூலம் ரூ.50,000/- மற்றும் எதிரி மூலம் ரூ.12,000/- எனது வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் பதில் 3ல் எனக்கும் எதிரிக்கும் இடையே நடந்த பரிவர்த்தனை அனைத்தும் வங்கி மூலமாக அனுப்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். ரூ.5,00,000/- ல் எதிரியிடம் இருந்து ரூ.66,000/- திரும்ப பெற்றுள்ளதாகவும் அதை காசோலையில் குறிப்பிடாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி என்னிடமிருந்து பெரிய தொகை எதுவும்ள பெறவில்லை என்றும், பிணையாக வாங்கிய காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K